Previous Date of examination : 20.02.2023

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

# CC No. 45/2021

**2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம்** நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி **அ..சா. 6** -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தாமோதரன் | வயது | /2024 |
| தகப்பனார் பெயர் | சித்தன் | ஜாதி | |
| தொழில் | காவல் உதவி ஆய்வாளர் | மதம் | |
| ஊர் | சேலம் | தாலுக்கா | |

( 4 வது எதிரி ஆஜர், 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல்செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது சேலம் ஏத்தாப்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் 2019 ஆம் வருடம் திருவாரூர் நகர காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 26.06.2019 ம் தேதி 13.00 மணிக்கு நான் நிலையப்பொறுப்பிலிருந்தபோது ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த சைத்தான் சிங் என்பவர் எழுத்துமூலமாக கொடுத்த புகாரை பெற்று, நிலையக்குற்ற எண். 227/2019, சட்டப்பிரிவு 420, 294(பி), 506(2), 452 இ.த.ச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) பின்னர் வழக்கை விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

1) புகாரில் பெறுநர் என்ற முகவரியில் காவல் ஆய்வாளர் , நகர காவல் நிலையம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் எண். 7 ல் பர்வீன் பீவி, நாகவள்ளி, சேகர் ஆகிய எதிரிகளுடைய தந்தை பெயர் மற்றும் முகவரி குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் வாதி கொடுத்த

புகாரில் மேற்கண்ட நபர்களின் தகப்பனார் பெயர் முகவரி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் சம்பவத்தை பார்த்ததாக சாட்சியின் பெயர்கள் எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2) புகாரில் தமிழ்செல்வம், கான்சிங், மங்கள்ராம் ஆகியோர் உடனிருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் யார் எழுதினார்கள் என்ற குறிப்பு புகாரில் இல்லை என்றால் சரிதான். 25.08.2018 என்ற தேதியன்று வாதியால் புகார் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் நாங்கள் காலதாமதாக வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. புகார் 4 1/2 மாதம் காலதாமதாக கொடுக்கப்பட்டதற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல வாதி என்னிடம் புகார் எதுவும் நேரடியாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளரிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் ஆய்வாளர் சொன்ன ஆலோசனை படி நான் பின்னிட்டு வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றும் அதனால் தான் முதல் தகவல் அறிக்கையில் குளறுபடிகள் உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் காலத்தில் ஆளும் கட்சியில் இருந்த பட்டை ரவி என்கிற ரவிச்சந்திரன் செல்வாக்கை பயன்படுத்தி பணம் பறிக்கும் நோக்கத்தில் கொடுத்த பொய்யான புகாரினை நான் வழக்காக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை -**

1வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

ஒம்/- எல். ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.